**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 57/2026 |
| Deposition of witness | PW- 8 /LW- 11 |
| Name | திரு. இளங்கோ (SI) |
| Father's Name | திரு. முத்துப்பாண்டி |
| Village | அச்சன்புதூர் |
| Taluk | கடையநல்லூர், தென்காசி |
| Age | 27/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 2nd day of July 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.12.2025 அன்று காலை 08.00 மணிக்கு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருளரசு, ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த **மாதிரிவரைப்படம் அசாஆ. 10** ஆகும். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் அருளரசு, ராஜேந்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ சாட்சிகள் விக்னேஷ், சிவக்குமார், ராஜமணிகண்டன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காலை 11.10 மணிக்கு Wireless Communication மூலம் ஒரு விரல் ரேகை பதிவு கூடத்திற்கு தகவல் சொன்னேன். சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடி தக்க புலன் வைக்கப்பட்டது. பின்பு அன்றைய தினமே பகல் 12.15 மணிக்கு ஒரு விரல் ரேகை பதிவு ஆய்வாளர் கீதா சம்பவ இடத்திற்கு வந்து பதிவுகளை ஆய்விற்கு எடுத்துச்சென்றார். ஆய்விற்கு பின் அவர்களை விசாரணை செய்ததில் அவர் அளித்த அறிக்கையில் சம்பவ

வீட்டில் இருந்த Steel Bero விலிருந்த ஒரு விரல் ரேகை பதிவானது கரூர் நகர கா.நி குற்ற எண் 1136/2020 ச/பி 457,380 IPC வழக்கில் தொடர்புடைய எதிரியான செல்வகுமார் (எ) சக்கரை த/பெ மலைராஜா என்று தெரிய வரவே எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 25.12.2025 அன்று காலை சுமார் 09.30 மணிக்கு மதுக்கூர் பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பாப்பாத்தி குளம் அருகே சந்தேகத்திற்கு இடமாக கையில் பையுடன் 2 நபர்கள் நின்றுகொண்டிருந்ததாக ரகசிய தகவலின் படி அங்கு சென்று பார்த்தபோது அந்த 2 நபர்களை விசாரித்த போது முன்னுக்குபின் முரணாக பதில் சொல்ல கையில் இருந்த பையினை சோதனை செய்தபோது அதில் இருந்த Laptop னை On செய்து Password போட சொன்னபோது தவறாக Password யை போட்டதால் சந்தேகப்பட்டு அவர்களை விசாரிக்க கையில் பையுடன் இருந்த நபர் தன் பெயர் செல்வகுமார் த/பெ மலைராஜா என்றும், மற்றொருவர் சையது கலிம் த/பெ ஜான்பாஷா என்பவர்களை விசாரிக்க அவர்கள் இருவரும் கடந்த 07.12.2025 மதுக்கூர் முதல் சிரமேல்குடி ரோட்டில் உள்ள பூட்டிக்கிடந்த வீட்டில் நுழைந்து சாவியை எடுத்து வீட்டை திறந்து திருடி Laptop னை எடுத்து சென்றதாக சொன்னதன்பேரில் செல்வகுமார் மற்றும் சையது கலீம் ஆகியோர்கள் இவ்வழக்கின் எதிரிகள் என்று கண்டறிந்து 25.12.2025 அன்று காலை 10.00 மணிக்கு இருவரையும் பாப்பாத்தி குளம் அருகே குற்ற காரணம் கூறி கைது செய்தேன்.

பின்னர் செல்வகுமார் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அறிவழகன், பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை பதிவு செய்து ஒப்பதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் ச/பி வை 303(2) BNS லிருந்து 331(4), 305(a) BNS ஆக மாற்றம் செய்தேன். **அந்த ச/பி மாறுதல் அறிக்கை அ.சா. ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் செல்வகுமார் எடுத்து ஆஜர் செய்த Dell

Laptop மற்றும் அரக்கு கலர் பை ஒன்றையும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் முன்னிலையில் காலை 11.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா. ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அறிவழகன், பழனியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரிகள் மற்றும் தடங்களுடன் நிலையம் ஆஜராகி வழக்கின் எதிரிகள் செல்வகுமார் மற்றும் சையது கலீம் யை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 26.12.2025 அன்று காலை 10.00 மணிக்கு பட்டுக்கோட்டை AAA Lodge ற்கு வந்து அங்கே Manager ஆக வேலை செய்யும் பார்த்தசாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகள் தங்கி இருந்ததற்கான ஆவணமான Ledger யை உண்மை நகல் பெற்று நிலையம் வந்தேன். அந்த Ledger ன் உண்மை நகல் **அ.சா. ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் தடயங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து CP NO 373/2025 பெற்று இறுதியாக 01.01.2026 அன்று வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மதுக்கூர் கா.நி HC 2893 திரு.உதயன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது ச/பி. 331(4), 305(a) BNS பிரிவுகள் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திலிருந்த பொருட்களில் மொத்தம் எத்தனை விரல் பதிவுகள் இருந்தது என்று தெரியுமா என்றால் மொத்தம் 3 பதிவுகள் இருந்ததாக ஆய்வாளர் கீதா அறிக்கை கொடுத்தார். அதில் 2 பதிவு ரேகைகள் வீட்டின் உரிமையாளருடையது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். புகார்தாரரிடம் இந்த வழக்கின் தடயப்பொருளை தவிர மற்றொரு Laptop உள்ளது என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து வழக்கு

தடயப்பொருளை தவிர வேறு பொருட்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் நகை திருடு போனதாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. புகார்தாரர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் நல்ல சுயநினைவுடன் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, தடயபொருள் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் கா.நி வைத்து தயார் செய்துவிட்டு வழக்கை சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை